**OS.NO:104/2024**

**PW 2 : திருமதி.ராதிகா**

நாள் : 08.08.2025

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**
**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் தெரு, தெருவாக சென்று காய்கறி வியாபாரம் செய்கிறேன். 15ந் தேதி காலை 7 மணிக்கு வாழைமரங்களை வெட்டும் போது நான் நேரடியாக பார்த்தேன். என் மாமனார் அவராகவே வாழை மரங்களை வெட்டும் இடத்திற்கு, நான் நீண்ட நேரமாக வீட்டிற்க வராததால், என்னை காணவில்லை என்று வாழை மரங்களை வெட்டும் இடத்திற்கு வந்தார். அக்கம் பக்கம் நிலத்தைச் சார்ந்த தேவா மற்றும் தேவாவின் அப்பாவும் அங்கு இருந்தார்கள். அவர்களை நீதிமன்றத்தில் விசாரித்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால், சரிதான். அவர்களை எங்கள் தரப்பில் சாட்சியாக விசாரிக்க தயாரா என்றால், நாங்கள் விசாரிக்க தயாராக உள்ளோம். இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் 15ந் தேி காலை 9 மணிக்கு நான் தான் புகார் கொடுத்தேன். நான் புகார் கொடுத்த பிறகு 4வது நாள் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். போலீசார் நடவடிக்கை எடுக்காததால், எஸ்பி அலுவலகத்தில் புகார் கொடுத்த பிறகு போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். எஸ்பி அலுவலகத்தில் கொடுத்த புகாரின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். அந்த நகலை பார்த்தால் எஸ்பி அலுவலகத்தில் எதற்காக புகார் கொடுக்கப்பட்டது என்ற விவரம் தெரியவரும் என்றால், சரிதான். சம்பவத்திற்கு பிறகு, நான் வீட்டிற்கு காலை 8, 8.30 மணியளவில் வீட்டிற்கு திரும்பி வந்தேன். என் நிலத்தில் இருந்து ஓடை வரை நடந்துதான் செல்ல வேண்டும், நடந்து தான்

வரமுடியும் என்றால், சரிதான். ஓடைக்கு அப்புறம்தான் சாலை வசதி உள்ளது, வண்டிகள் போக, வர முடியும் என்றால், சரிதான். வாழைமரங்களை வெட்டும் போது கேட்ட என்னை பிரிதிவாதியும், அவரது மனைவியும் அசிங்கமாக பேசி, என்னை அடித்து, என் தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டார்கள் என்ற விவரத்தை நான் புகாரில் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். கூட்டுறவு சங்கத்தில் வாழை மரம் பயிர் செய்வதற்காக கடன் வாங்கியதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன். திமிரி காவல் நிலையத்தில் புகாரை நான்தான் எழுதிக்கொடுத்தேனா என்றால், நான் சொல்லி புகார் எழுதிய பிறகு நான் அதை படித்து பார்த்து, கையெழுத்து போட்டேன். 2ம் வாதி என் கணவர் என்பதாலும், 1ம் வாதி என் மாமனார் என்பதால், வாதிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், பொய்யான விவரங்களை சொல்லி முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அது சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness and admitted by him/her to be correct.

M SELVAM

Principal District Judge, Ranipet
Digitally signed by M SELVAM
DN: cn=M SELVAM, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

Principal District and Sessions Judge,
Ranipet